**செய்தி வெளியீடு எண்.65/2018** **நாள் 31.10.2018**

சென்னை குடிநீர் வாரியத்தில் கட்டணம் செலுத்தி லாரிகளின் மூலம் குடிநீர் பெற பதிவு செய்யும் நுகர்வோர்களுக்கு அனுப்பப்படும் பதிவு எண்ணுடன் தற்போது ஒரு முறை கடவுச்சொல் எண்ணையும் ( OTP – One Time Password) குறுஞ்செய்தியாக அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதே போன்று கழிவுநீர் தொட்டியில் இருந்து கழிவு நீர் வெளியேற்ற பதிவு செய்யும் நுகர்வோர்களுக்கும் பதிவு எண்ணுடன் தற்போது ஒரு முறை கடவுச்சொல் எண்ணையும் ( OTP – One Time Password) குறுஞ்செய்தியாக அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த ஒரு முறை கடவுச்சொல் எண்ணை ( OTP – One Time Password) சென்னை குடிநீர் வாரியம் குடிநீர் விநியோகம் செய்யும் போது வரும் லாரி ஓட்டுநரிடம் தவறாமல் வழங்க வேண்டும். அப்போது தான் குடிநீர் விநியோகம் செய்யப்படும். மேலும் கழிவு நீர் அப்புறப்படுத்த வரும் லாரி ஓட்டுநரிடமும் இதே போன்று ஒரு முறை கடவுச்சொல் எண்ணை ( OTP – One Time Password) வழங்க வேண்டும். அப்போது தான் கழிவு நீர் அப்புறப்படுத்தப்படும். அவ்வாறு வழங்க மறுக்கும் நுகர்வோர்களுக்கு வாரியம் தனது சேவையை தொடர்ந்து செய்ய இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இந்த புதிய அறிவிப்பினை **01.11.18** முதல் நடைமுறைப் படுத்த அனைத்து நுகர்வோர்களும் ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்டுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்